# ஆடு வளர்ப்பு... நஷ்டமே இல்லாத நல்லதொரு பண்ணைத் தொழில்

## 25.01.2014

பசுமை விகடன்' மற்றும் 'அம்மன் ஆட்டுப்பண்ணை' ஆகியவை இணைந்து... டிசம்பர் 22-ம் தேதியன்று, விருதுநகர் லட்சுமி திருமண மண்டபத்தில் ஆடு வளர்ப்புக் கருத்தரங்கை நடத்தின. தமிழகம் முழுவதும் இருந்து சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்திண்டுக்கல் மாவட்டப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர் பீர் முகமது, உதவிப்பேராசிரியர் டாக்டர்.சங்கர், அம்மன் ஆட்டுப்பண்ணை இயக்குநர் சதாசிவம் ஆகியோர் பங்கேற்று, ஆடு வளர்ப்பதில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் நுட்பங்களை எடுத்து வைத்தனர்.

வெள்ளாட்டுப் பண்ணைக்கான இட அமைப்பு, ஆடு ரகங்கள் தேர்வு, தீவன வகைகள், மேய்ச்சல் முறைகள், ஆடுகளைத் தாக்கும் நோய்கள், தடுக்கும் முறைகள், தடுப்பூசிகள் , இனப்பெருக்க முறைகள், குட்டிகள் பராமரிப்பு ஆகியவை பற்றி, படக் காட்சிகளுடன் சங்கர் விளக்கினார். சதாசிவம் பேசும்போது, "முதலீடு செய்வதற்கு முன்பு ஆர்வத்தோடு கூடிய நம்பிக்கை அவசியம். இதுதான் வெள்ளாடு வளர்க்க அடிப்படைத் தேவை. ஆடுகள் வளர்க்க... உன்னி, பேன் உள்ளிட்ட ஒட்டுண்ணிகளிடமிருந்து பாதுகாக்கும் அளவுக்கு எளிமையான கொட்டகை அமைப்பு இருந்தாலே போதும். கொட்டகைக்கு அதிகப்பணம் செலவிடத் தேவையில்லை. குறைந்த முதலீட்டில் உடனடி வருமானம் பெற வெள்ளாடுகள் ஏற்றவை. ஆடுகளாக விற்பனை செய்வதை விட கறியாக விற்பதன் மூலம் கூடுதல் லாபம் பெறலாம். பால் மூலமும் வருமானம் எடுக்கலாம்" என்று சொன்னார்.

பீர் முகமது பேசும்போது, "குட்டிகள் பிறந்த நான்கு மாதத்தில் காப்பீடு செய்ய வேண்டும். காப்பீடு செய்யும் போது, திறந்தவெளி மேய்ச்சலின் போது விபத்து மற்றும் நோய் தாக்கி இறந்தால் கூட இழப்பீடு கிடைக்கும். வெளளாட்டுப்பாலில் உள்ள கொழுப்பும் புரதமும் எளிதில் செரித்து விடுவதால், இது தாய்ப்பாலுக்கு நிகரானது. மாடுகள் போல் இல்லாமல் வெள்ளாடுகளில் எப்போது வேண்டுமானாலும், பால் கறந்து கொள்ளலாம். காசநோய், குடல் புண் போன்றவைக்கு வெள்ளாட்டுப் பால் அருமருந்து. ஏழைகளின் புரதப் பற்றாக்குறையைப் போக்கும் ஒரே தீர்வு வெள்ளாட்டுப்பால் மட்டுமே. மாட்டுச் சாணத்தை விட வெள்ளாட்டுச் சாணம் சிறந்த எரு. மாட்டுச் சாணத்தை மட்கச் செய்துதான் உரமாகப்போட முடியும். ஆனால், ஆட்டுச் சாணத்தை உடனடியாகப் பயன்படுத்தலாம். அதனால் ஆடு வளர்ப்பில் எப்போதும் நஷ்டம் என்பதே இல்லை" என்று வலியுறுத்திச் சொன்னார்.

கருத்தரங்கின் பார்வையாளர் வரிசையில் இருந்தவர்களில், பலரின் கவனத்தையும் ஈர்த்தார்... தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத் தலைவர் நவநீத கிருஷ்ணன். நிகழ்ச்சியில் பேசும்படி அவரிடம் நாம் கேட்டுக்கொண்டோம். உற்சாகத்துடன் மேடையேறியவர், "இன்றைக்கு நேர்மையான முறையில் அதிகப்பணம் சம்பாதிக்கும் தொழிலாக விவசாயமும், கால்நடை வளர்ப்பும் இருக்கிறது. டாக்டர், வக்கீல்... எனச் சொல்லிக்கொள்வதை விட விவசாயி என சொல்லிக் கொள்வதில் தான் உண்மையான பெருமை உள்ளது" என்று ஆரம்பித்து, விவசாயப் பெருமையை எடுத்து வைத்தார் நவநீத கிருஷ்ணன்!

கருத்தரங்கில் பங்கேற்ற இந்திய விவசாய சங்கத்தலைவர் புத்திசிகாமணி, எட்டு விவசாயிகளுக்கு, ‘பசுமை விகடன்’ இதழுக்கான ஒரு வருட சந்தா தொகையைச் செலுத்தினார்.

**தொடர்புக்கு, டாக்டர் பீர் முகமது, செல்: 94433-21882**

**ஆதாரம் : பசுமை விகடன்**

**வெளியீடு : 25.01.14**

**www.vikatan.com**